திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி முதல்வர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : முனைவர்.வ.கிருஷ்ணன் எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,

ந.க.எண்: 1583/ஆ/2025-1 நாள்: 23-07-2025

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை - சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - 2022-2023 ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர் நேரடி நியமனம் - திருமதி.நா.ஐஸ்வர்யா, இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை 1: சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்:TNDCE/4777/2025-B1 நாள்: 26.06.2025.

2: சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித எண்: 1926/ PSD-D2/ 2023 நாள்: 04.09.2023.

3: சென்னை,கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் செயல்முறைகள் ந.க. எண்: 35681/பி1/2023 நாள்: 23.11.2023.

4: இவ்வலுவலக ந.க.எண்:743/ஆ/2023 நாள்: 24.11.2023.

**************

பார்வை (1)-இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, இத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் / சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் (நிலை-III) ஆகியோருக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 10 -இன்கீழ் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்களே நியமன அதிகாரி என்பதால் இணை இயக்குநர்கள் / கல்லூரி முதல்வர்கள் அளவிலேயே பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2) மற்றும் (3)-இல் காணும் சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் மற்றும் சென்னை, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, 2022-2023 ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமன ஆணை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை (4)-இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, இக்கல்லூரியில் திருமதி.நா.ஐஸ்வர்யா என்பார் இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டு 24.11.2023 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (1)-இல் காணும் சென்னை, கல்லூரிக் கல்வி ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி, இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட வரிசை எண்: 22-இல் உள்ள திருமதி.நா.ஐஸ்வர்யா என்பார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 24.11.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாகிறது.

முதல்வர்
சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி
திருப்பூர்.

பெறுநர்:

1. திருமதி.நா.ஐஸ்வர்யா, இ.நி.உ, சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி, திருப்பூர்.
2. பணிப்பதிவேடு.
3. உபரி.